**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**S.C. No: 66/2024**

**Deposition of Witnesses for PW4**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.**நீலகண்டன்** | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **07.10.2024.**

**எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞரும் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது மேற்பனைகாட்டில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 12.09.2011ம் தேதி சுமார் இரவு 9.45 மணிக்கு நானும், கிருஷ்ணன் என்பவரும் அறந்தாங்கி சுபா தியேட்டர் அருகில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது மனோகரன் என்பவர் ஸ்கூட்டி வண்டியிலும், யோகேஸ்வரனும் ஹீரோ ஹோண்டா வண்டியிலும் வந்தார்கள். அப்போது இருவரும் எங்களை பார்த்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு இண்டிகா கார் வேகமாக எங்கள் முன்னால் வந்து நின்றது. அதில் சரவணன் மற்றும் கண்ணன் இருவரும் காரை விட்டு இறங்கிவந்து யோகஸ்வரனுடன் தகராறு செய்தார்கள். கண்ணன் வந்து யோகேஸ்வரனுடன் கைகலப்பு ஆகிவிட்டது. சரவணன் என்பவர் கையில் ஒரு கம்பியால் யோகேஸ்வரன் தலையில் போட்டார். அதை கேட்க அவரது இடது கையில் அடித்தார். அதை பார்த்து மனோகரன் தடுக்க வந்தபோது பக்கத்தில் ரீப்பர் சட்டத்தால் கண்ணன் மனோகரனை அடித்தார். யோகேஸ்வரன் நிலை தடுமாறி காயத்தால் கீழே விழுந்துவிட்டார். உடனே நான் யோகேஸ்வரனை மட்டும் என் வண்டியில் வைத்து அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றேன். மனோகரனை மற்றொரு வண்டியிலும் அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு வந்தார். பின்னர் மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். என்னை போலீசார் அறந்தாங்கி மருத்துவமனையிலும், மறுநாள் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையிலும் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் என்னை அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் வைத்து இரவு 10.30 மணிக்கு விசாரித்தார்கள். போலீசார் அறந்தாங்கி மருத்துவமனைக்கு வந்து எவ்வளவு நேரத்தில் விசாரித்தார்கள் என்றால் 10 நிமிடத்தில் விசாரித்தார்கள்.சம்பவத்தில் காயம்பட்ட கண்ணன் இறந்துவிட்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தில் கண்ணனுக்கு

எங்கு எங்கு காயங்கள் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலீசார் மருத்துவமனைக்கு யார் கொடுத்த தகவலின் அடிப்படையில் வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நானும் தகவல் கொடுக்கவில்லை. என்னை போலீசார் மருத்துவமனையில் விசாரித்தபோது மனோகரன் மற்றும் யோகேஸ்வரனை விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. மனோகரன் மற்றும் யோகேஸ்வரன் மருத்துவமனையில் போலீசார் வரும்போது அவசர சிகிச்சை பிரிவில் இருந்தார்கள். எனக்கு கம்பி, கத்தி, அரிவாளர், கட்டை ஆகியவற்றை வேறுபாடுகள் நன்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தபோது மனோகரன் மற்றும் யோகேஸ்வரனை மருத்துவமனையில் நான் தான் கொண்டு சேர்த்ததாக சொல்லியுள்ளேன். இருவரையும் மருத்துவமனையில் சேர்க்கும்போது சம்பவம் குறித்து சரியான தகவலை நான் மருத்துவரிடம் சொன்னேன். நான் சொன்ன தகவலை பதிவு செய்துகொண்டு மருத்துவர்கள் மனோகரன் மற்றும் யோகேஸ்வரனை சிகிச்சையில் சேர்த்தார்கள். நான் அறந்தாங்கி போலீசாரிடம் அறந்தாங்கி மருத்துவமனையில் கொடுத்த தகவலை எழுத்துப்பூர்வமாக பதிவு செய்து கொண்டார்கள். அந்த வாக்குமூலம் தொடர்பாக போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அந்த வாக்கு மூலத்தை பார்த்தால் சம்பவம் எப்படி நடந்தது என்றும், கண்ணனுக்கு எப்படி காயங்கள் ஏற்பட்டது என்ற விவரம் தெரியும். நானும், கிருஷ்ணன், யோகேஸ்வரன் மற்றும் கண்ணன் ஆகியோர் சுபா தியேட்டர் அருகில் உள்ள ஹோட்டலுக்கு எதிரே நின்று பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் சம்பந்தமாக சுமார் 10 நிமிடம் பேசிக்கொண்டிருந்தோம். அந்த ஹோட்டல் ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ளது. அறந்தாங்கி என்பது எனக்கு சொந்த ஊரோ, வசித்து வந்த ஊரோ கிடையாது. எங்கள் ஊர் அறந்தாங்கியிலிருந்து பட்டுக்கோட்டை டூ அறந்தாங்கி சாலையில் 10 கிமீ தொலைவில் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அறந்தாங்கி டூ கட்டுமாவடி செல்லும் சாலையில் நடந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எங்கள் ஊருக்கு செல்லக் கூடிய வழியல்ல. யோகேஸ்வரன் எனக்கு சம்பவ காலத்திற்கு முன்பு 10 வருடங்களாக பழக்கம். புதுக்கோட்டையில் ஸ்ரீராம் நிறுவனத்தில் ஒன்றாக வேலை பார்த்த வகையில் நானும், யோகேஸ்வரனும் நண்பர்களாக இருந்தோம். சம்பவ காலத்தில் நான் புதுக்கோட்டை ஸ்ரீராம் நிதி நிறுவனத்தில் வேலை பார்த்தேன். நான் அறந்தாங்கி பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு அங்கிருந்து புதுக்கோட்டைக்கு பஸ்சில் வேலைக்கு செல்வது வழக்கம். எங்கள் நிதி நிறுவனத்தில் வேலை நேரம் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையாகும். புதுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கி 1 மணி நேரம் பேருந்தில் பயண நேரம். நான் புதுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கிக்கு பேருந்தில் வந்த இறங்கி அங்கிருந்து எனது இருசக்கர வாகனத்தில் அண்ணாசிலை வழியாக பட்டுக்கோட்டை தார்சாலையில் ராஜேந்திரபுரம் வழியாக மேற்பனைகாடு செல்வேன். அண்ணாசாலையிலிருந்து மேற்கு நோக்கி சென்றால் பட்டுக்கோட்டை செல்லும் தார்சாலை.கிழக்கு நோக்கி சென்றால் கட்டுமாவடி, அறந்தாங்கி செல்லும் தார்சாலை. அண்ணாசாலையிலிருந்து கட்டுமாவடி முக்கம் 1 கிமீ தூரம் இருக்கும். நான் அடிக்கடி சென்றுவருவதால் அறந்தாங்கி எனக்கு பரீட்சைமான ஊர். நான் சம்பவத்திற்கு மருத்துவமனையில் கத்தியை பயன்படுத்தி காயங்கள் ஏற்பட்டதாக யாரையும் சிகிச்சையில் சேர்கக்வில்லை. அதேபோல் அரிவாளை பயன்படுத்தி காயங்கள் ஏற்பட்டதாக யாரையும்

சிகிச்சையில் சேர்கக்வில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடந்ததாக சொல்வது சொல்லக்கூடிய இடத்தில் நான் இல்லை என்றும், நான் சொல்வது போல் எந்தொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், யோகேஸ்வரன் எனது நண்பர் என்பதால் அவருக்கு உதவி செய்வதற்காக காவல் துறையினர் வேண்டுகோளிற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் னஎ்றால் சரியல்ல. எதிரி எந்தொரு குற்ற சம்பவமும் செய்யவில்லை என்றும் யோகேஸ்வரன் வகையறா குற்ற சம்பவத்தில் ஈடுப்பட்டு கண்ணணை தாக்கி காயங்கள் ஏற்படுத்திவிட்டு அந்த குற்றவாளிகள் தப்பிபதற்காக அவர்களுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.